Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

3/2

வெளியீடு எண் : 16

கணபதி திருமேனிகள்



ACC NO 37955

விநாயகர் சதுர்த்தி வெளியீடு
31.8.2003

பொருள் உதவும் புண்ணியர் :

அருள் நெறிச் செம்மல்

திரு. S. ஆவுடையப்ப பிள்ளை,

திருநகர்.

வெளியிடுவோர்:

திருக்கயிலாய பரம்பரை

சைவ ஆதீனங்களின் சீடர் குழு,

திருநகர், மதுரை 625 006.

Koviloor Digital Library

முன்னுரை

மதுரைத் திருநகரில் இயங்கி வரும் திருக்கயிலாய பரம்பரை சைவ ஆதீனங்களின் சீடர் குழுவில் முக்கிய அங்கம் வகிப்பவரும், மதுரைப் பன்னிரு திருமுறை மன்றப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுபவரும், உழவாரம் புரவலருமாகிய **"அருள் நெறிச் செம்மல்" திரு.S.ஆவுடையப்ப பிள்ளை** அவர்கள் விநாயக சதுர்த்தி அன்று நல்ல நூல்களை வெளியிட வேண்டும் என்ற கடப்பாடு உடையவராய் ஆறாவது ஆண்டாக இந்நூலை வெளியிடுகிறார்கள். இந்நூலில் கணபதி திருமேனிகள் முப்பத்திரண்டின் தியான சுலோகங்களின் தமிழ் விளக்கத்துடன் படங்கள், நக்கீரர் அருளிய ஸ்ரீ விநாயகர் அகவல், 108 போற்றி வழிபாடுகள் ஆகியன இடம் பெறுகின்றன. இந்நூலை வெளியிடும் திரு. S.ஆவுடையப்பபிள்ளை அவர்கள் எல்லா நலன்களும் பெற்று மேலும் பல்லாண்டுகள் இப்பணியினைத் தொடர்ந்து செய்து வாழ, அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன். அன்பர்கள் பெற்றுப் பயன் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

25.8.2003
மதுரை.

அன்பன்,
நீ.சி. சுந்தரராமன்,
(கூடல் சுந்தரன்)
அமைப்பாளர்,
சைவ ஆதீனங்களின் சீடர் குழு.

Koviloor Digital Library

LIBRARY, KOVILOOR A. No. 37955

விநாயகர் அவதாரம்

விநாயகர் பிறப்பைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று. உமையும் சிவனும் ஒருநாள் உய்யான வனத்திற்குச் செல்கிறார்கள். அங்கே ஒரு பிடியும் களிறும் இன்பமாக இருப்பதைக் கண்டு தாங்களும் பிடியும் களிறுமாக மாறிக் களிக்கின்றனர். அப்போது உருவானவர் விநாயகர். இப்படிக் கூறுகிறது சுப்பிரபேத ஆகமம். திருஞானசம்பந்தரும்

"பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன்"

என்று கூறுகிறார். காஞ்சிப்புராணம் கூறும் விநாயகர் அவதாரம் சிறிது மாறுபட்டுள்ளது. சிவபிரானும் உமையம்மையும் உய்யான வனத்திற்குச் செல்கையில் அங்குள்ள மந்திர சாலையில் பிரணவம் எழுதப் பட்டுள்ளதை ஊன்றி நோக்க விநாயகர் அவதரித்தார் என்று கூறப்பட்டுள்ளது. எப்படியானாலும் உலகம் தோன்றுவதற்கு மூல காரணமாம் 'ஓம்' என்னும் பிரணவ உருவத்திலேயே விநாயகர் உருவம் அமைந்துள்ளது. அதன் மூலம் அந்தத் திரு உருவே அறிவுக்கு அறிவாகவும் எங்கும் வியாபித்து நிற்கும் பரம் பொருளாகவும், யாவராலும் அறியப்படாத நிலையிலேயும் எல்லோராலும் வணங்கப்படும் இயல்புடையதாகவும், இறைவனுடைய தன்மைகள் எல்லாம் நிறைந்து நின்று மக்களுக்கு அருள் செய்யும் திருக்கோலமாகவும் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சதுர்த்தி விரதம் தோன்றிய வரலாறு

சிவபெருமான் கணபதியைக் கணங்களின் தலைவராக நியமித்தார். அவருக்கு அணிமா, மகிமா முதலிய அஷ்ட சித்திகளையும் மனைவிகளாகப் பிரம்மதேவன் அளித்து கணபதியைப் பலவாறு துதி செய்தார். கணபதியும் மகிழ்ந்து பிரம்ம தேவனின் படைப்பெல்லாம் தன் அருளால் இடையூறின்றி நிறைவேற வரம் அளித்தார்.

பின்னர் விநாயகர், பூஜையில் பிரம்மன் அளித்த மோதகங்களைக் கையில் எடுத்துக் கொண்டு உயரக் கிளம்பி உலகெல்லாம் சுற்றி சந்திரலோகம் சென்றார். அங்கு பெருந் தொந்தியும், ஒடிந்த தந்தமும் நீண்ட தும்பிக்கையும், கையில் கொழுக்கட்டையும் தாங்கி வருகின்ற விநாயகரைக் கண்டு சந்திரன் வாய்விட்டுச் சிரித்துப் பரிகசித்தான். அதைப் பார்த்த விநாயகர் கோபம் கொண்டு 'நீ அழகாய் இருப்பதால் கர்வம் கொண்டு சிரித்ததால் உன் அழகு கெடுமாறு கலைகளை இழப்பாய்' என்று சபித்தார். மேலும் சந்திரனை யாராவது பார்த்தால் அவர்களுக்கு வீண் அபவாதம் ஏற்படுவதாகுக என்றும் சபித்தார். மற்றைய தேவர்கள் எல்லாம் வருந்தி பிரமனிடம் முறையிட அவரோ விநாயகரை அன்றி வேறு யாரும் சாபத்தைத் தீர்க்க இயலாது என்றும் ஒவ்வொரு சதுர்த்தியன்றும் குறிப்பாகக் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தியன்று விரதம் ஏற்று பலவகையான பழங்கள், அப்பம், மோதகம் இவைகளுடன் மதுரான்னங்கள் முதலியவற்றால் கணபதியைப் பூஜித்து, அந்தணருக்குப் பக்தியோடு தாம்பூலம், தக்ஷிணை

Koviloor Digital Library

முதலியவைகளை அளித்தால் மகிழ்வார் என்றும் கூறினார். இதைக் கேட்ட தேவர்கள் தேவகுருவைச் சந்திரனிடம் அனுப்ப அவர் சந்திரனுக்கு இந்த முறையைக் கூறினார். சந்திரன் பிரமன் கூறியபடியே பூஜை செய்ய விநாயகரும் மகிழ்ந்தார். சாபம் நீக்கினார். சுக்ல பட்ச சதுர்த்தியன்று சந்திரனைப் பார்ப்பவர்களுக்கு ஓர் ஆண்டு வரை தொடர்ந்து வீண் அபவாதங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு கிருஷ்ணபட்ச சதுர்த்தியிலும் மோதகம் அப்பம் முதலியவைகளுடன் என்னைப் பூசித்தபின் ரோகிணியுடன் கூடிய சந்திரனைப் பூசிப்பவர்களுக்கு கஷ்ட நிவாரணம் செய்வேன் என்றும் கூறினார். அதே போல் ஆவணி சுக்ல சதுர்த்தியன்று மண்ணால் விநாயகர் உருவத்தைப் படைத்து பல புஷ்பங்களால் பூசித்தால் ஒருவன் எண்ணிய காரியத்தில் வெற்றியும் சகல காரிய சித்தியும் அளிப்பார் விநாயகப் பெருமான்.

விநாயகரது திரு உருவங்கள்

இவ்வாறு மக்களால் வணங்கப்பெறும் விநாயகரது திருவுருவத்தைச் சித்திரங்களில் எழுதினார்கள்; கல்லிலே செதுக்கினார்கள்; செம்பிலே வடித்தார்கள் தமிழர்கள். அவரது திருமேனியின் அமைப்பு கட்டடக்கலை, சிற்பக்கலையின் வரம்புக்குட்பட்டதாகச் செய்தனர். இத்திருமேனிகளை அமைக்கவும் வழிபடவும் தியான முறைகளும் யந்திரங்களும் மந்திரங்களும் மிகவும் முக்கியமானவை. அவ்வாறு 32 வகையான கணபதி திருமேனிகள், தியான சுலோகங்களின் தமிழ் விளக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

கணபதி திருமேனிகள்




1. பால கணபதி


வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளை வைத்துக் கொண்டிருப்பவரும், பால சூரியனைப் போன்ற சரீர காந்தியை உடையவருமான பால கணபதியை வணங்குகிறேன்.

2. தருண கணபதி

கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம் தன்னுடைய ஒரு தந்தம், நெற்கதிர், கரும்பு இவ்வெட்டு பதார்த்தங்களையும் வைத்துக் கொண்டிருப்பவரும், நண்பகலில் விளங்குகின்ற கதிரவனின் ஒளியைக் கொண்டவருமான தருண கணபதி எப்போதும் உங்களைக் காப்பாற்றுவாராக. சிவப்பு நிறம் உடையவர்.




Koviloor Digital Library



3. பக்தி கணபதி

தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயசம், இவைகளை உடையவரும் சரத்கால சந்திரனைப் போல வெண்மையான சரீரத்தை உடையவருமான பக்தி கணபதியை வணங்குகின்றேன்.

4. வீர கணபதி




வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம் (இரும்பு உலக்கை), கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, த்வஜம் ஆகிய ஆயுதங்களைத் தரித்திருப்பவர். சிவப்பு நிறம் உடையவர்.

5. சக்தி கணபதி



தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பவரும், ஒருவருக்கொருவர் அணைத்துக் கொள்ளப்பட்ட இடுப்பை உடையவரும், சந்தியா காலத்தைப்போல சிவந்த நிறமுடையவராக இருப்பவரும், பாசம், அங்குசம் இவைகளை வைத்துக் கொண்டிருப்பவரும் பயத்தைப் போக்கும் சக்தி கணபதி ஆவார்.


Koviloor Digital Library




6. துவிஜ கணபதி

புஸ்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் இவைகளை உடையவர். மிக்க ஒலி பொருந்திய கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில் அணிந்திருப்பவர். சந்திரனைப் போல் வெண்மையான நிறமுடையவர். நான்கு யானை முகங்களுடன் சோபிக்கின்றவர் த்விஜ கணபதி.

7. சித்தி கணபதி



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கை உள் பட ஐந்து கரங்களில் தரித்தவர். பொன் கலந்த பசுமை நிறமுடையவராக விளங்குபவர். சித்தி சத்தியை மடியில் கொண்டவர்.



8. உச்சிஷ்ட கணபதி

நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெல், கதிர், குன்றிமணியாலான ஜபமாலை இவைகளைத் தரித்திருப்பவர். நீல நிறமாக இருப்பவர் உச்சிஷ்ட கணபதி ஆவார். கருநீல நிறம். இந்த கணபதியை 'விஜய கணபதி' என்று ஸ்ரீ தத்துவ நிதி கூறுகிறது.

Koviloor Digital Library




9. விக்ன கணபதி

சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்து போல சுருட்டி மாலை ஆகியவற்றைத் தமது கரங்களில் கொண்டவர்.ஆபரணங்களை அணிந்தவர். பொன்மேனி ரூபமாகவும் விளங்குபவர்.

10. க்ஷிப்ர கணபதி

தந்தம், கல்ப விருக்ஷத்தின் கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் இவைகளைத் தரித்துக் கொண்டிருப்பவர். செம்பரத்தம் பூவைப் போல் அழகான சிவந்த சரீர காந்தியை உடையவர். இந்த க்ஷிப்ர கணபதியைத் தியானித்தல் வேண்டும்.



11. ஹேரம்ப கணபதி



அபயம், வரதம் முத்திரைகளைக் கொண்டவர். பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவைகளைத் தரித்துக் கொண்டிருப்பவர். ஸிம்ஹ வாகனத்திலிருப்பவர். ஐந்து யானை முகங்களுடன் கூடியவர் ஹேரம்ப கணபதி. மஞ்சள் நிறம் உடையவர்.


Koviloor Digital Library




12. லக்ஷ்மீ கணபதி

கிளி, மாதுளம்பழம், மாணிக்க ரத்னங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கத்தி, மிகவும் பிரகாசிக்கின்ற ஜ்யோதியாகிய அமிருதப் பிரவாஹம் ஆகியவற்றை உடையவர். நீலோத்பலத்தைக் கையில் கொண்டவர். இரு தேவிகளை இருபக்கத்திலும் கொண்டவர். வரத ஹஸ்தத்துடன் கூடிய லக்ஷ்மீ கணபதியானவர் நம்மைக் காப்பாராக.

13. மகா கணபதி



மாதுளம்பழம், கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம், இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கும் தாமரையை ஏந்திய தேவியால் பிரேமைக் குறிப்போடு தழுவப் பெற்றவர்.



14. விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.


Koviloor Digital Library




15. நிருத்த கணபதி

பாசம், அங்குசம், அதிரசம், கோடரி, அசைகின்ற கைகளின் விரல்களில் அணியப்பட்ட சிறந்த மோதிரங்களை உடையவர். மஞ்சள் நிறமுடையவர். கல்ப விருக்ஷத்தின் அடியில் இருப்பவர், நர்த்தன கணபதி. (வேறு தியானத்தில் ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.)

16. ஊர்த்துவ கணபதி




செங்கழுநீர்ப் பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு வில், அம்பு, தந்தம் இவைகளைக் கரங்களில் கொண்டவர். தங்க நிறம் கொண்டவர். பச்சை நிறமுடைய தேவியினால் ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்டவர் ஊர்த்துவ கணபதி.



17. ஏகாட்சர கணபதி

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர், பதுமாசனத்திலிருப்பவர். பெருச்சாளி வாகனர்.


Koviloor Digital Library



18. வர கணபதி

செவ்வண்ணர். யானை முகவர். முக்கண்ணர். பிறை முடியர். பாசம், அங்குசம் தரித்தவர். தேன் நிறைந்த கபால பாத்திரத்தை ஏந்தியவர்.

19. திரயாக்ஷர கணபதி



அசைகின்ற செவிகளாம் சாமரைகளை உடையவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.



20. க்ஷிப்ர பிரசாத கணபதி

பாசம், அங்குசம், கற்பகக் கொடியின் சுவை தரும் மாதுளம் பழம், துதிக்கையில் தாமரை மொட்டு இவற்றைத் தரித்தவர். இளம்பிறை ஒத்த நெற்றியை உடையவர். திருவாபரணங்கள் பல அணிந்தவர். பேழை வயிற்றை உடையவர்.

Koviloor Digital Library





21. ஹரித்திரா கணபதி

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களை உடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

22. ஏக தந்த கணபதி

பேழை வயிற்றுடன் நீல மேனியர். கோடரி, அட்ச மாலை, லட்டு, தந்தம் இவற்றை உடையவர்.





23. சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தை உடையவர். சிவந்த திருமேனியர். இவர் நமது இடையூறுகளை அகற்றுவாராக.

Koviloor Digital Library

24. உத்தண்ட கணபதி

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றை ஏந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பொன் மேனியளாகிய தேவியைத் தழுவுபவர். சிவந்த மேனியை உடையவர்.

25. ரணமோசன கணபதி



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர். வெண் பளிங்கு நிற மேனியர். செந்நிறப் பட்டாடை உடுத்தியவர்.

26. துண்டி கணபதி

அட்ச மாலை, கோடரி, ரத்ன கலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

Koviloor Digital Library




27. துவிமுக கணபதி

தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம், இவற்றைக் கையில் எந்தியவர். மயில் நீல மேனியர். செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

28. மும்முக கணபதி



வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரை ஆசனத்தின் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.



29. சிங்க கணபதி


வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளை உடையவர். வெண்ணிற மேனியர். யானை முகவர். சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர். (பத்ம பீடத்தில் எழுந்தருளி விளங்குதலும் உண்டு).

Koviloor Digital Library

30. யோக கணபதி


யோக நிலையில் யோக பட்டம் தரித்து இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து, இந்திர நீல நிற ஆடையை உடுத்தி, பாசம், அட்ச மாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

31. துர்கா கணபதி



உருக்கிய பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்ச மாலை, தந்தம் இவைகளை வலது கைகளிலும், பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளிலும் உடையவர். செந்நிற ஆடையர்.

32. சங்கடஹர கணபதி



இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பொன்னிற மேனியளாக நீலப் பூவை ஏந்தியவளாக இருப்பள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிற ஆடை அணிந்தவர்.

Koviloor Digital Library

இந்த 32 கணபதி தியானம் மற்றும் வடிவங்கள் தவிர பிங்கள கணபதி, புவன கணபதி, சக்தி கணபதி, பஞ்சபூத கணபதி, மூஷிக கணபதி, மூலாதார கணபதி, சித்தி புத்தி கணபதி, வல்லபை கணபதி, வாதாபி கணபதி இவற்றோடு தற்காலத்தில் சர்ப விநாயகர், கண் திருஷ்டி விநாயகர் என்னும் பல விநாயகர் திருமேனிகள் உலா வந்துள்ளன.

பிள்ளையார் சுழி

எதையும் எழுதத் துவங்குவோர் தாம் மேற்கொள்ளும் செயல் செம்மையாக முடிய வேண்டும் என்பதற்குப் பிள்ளையாரின் துணை வேண்டி இச் சுழியினைப் போடுகிறார்கள். பிள்ளையாரின் வடிவம் ஓங்கார வடிவம். அந்த ஓங்கார எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று என்பர்.

ஒலிவடிவமும் வரிவடிவமும் சேர்ந்து எழுத்தாகிறது. ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் 0. வரி வடிவைக் குறிப்பது கோடு. இந்த இரண்டும் சேர்ந்துதான் பிள்ளையார் சுழியாயிற்று. ஒலி வடிவம் 'நாதம்' என்றும் வரிவடிவம் 'விந்து' என்றும் சொல்லுவார்கள். உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும் வேண்டும். இந்த எண்ணங்களெல்லாம் சேர்ந்து உள்ளத்தை அசைக்க உள்ளம் நம்முடைய கையை அசைக்க உருவாவதுதான் பிள்ளையார் சுழி.

பலவகைக் கருத்துகள் நிலவியபோதிலும் எழுத்துப் பணி முட்டின்றி முடிய கடவுளை வேண்டி, அஃதாவது சக்தியையும் சிவனையும் வேண்டி இடப்படும் குறியே பிள்ளையார் சுழியாகும்.

Koviloor Digital Library

நக்கீரர் அருளிய
ஸ்ரீ விநாயகர் அகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பக கனியே
அல்லல் வினையை அறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக!
ஏழை யடியேன் இருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்,
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலக சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்கப்
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பண்மணி மார்பும்
பொன்னாபரணமும் பொருந்து முந் நூலும்
மின்னா மெனவே விளங்குபட் டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாதம் அண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்

Koviloor Digital Library

இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் திருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலாதார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா க்ஷரமும்
ஓமென்று உதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைகள் இரண்டின் நடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறிக்கு
மண்டல மூன்றும் வாய்வோர் பத்துங்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி
ஆறாதார அங்குச நிலையைப்
பேறாகிநின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரேழுத் தக்ஷர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவினைப் பொற்கம லாசனன்
திருவிளை யாடலின் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி

Koviloor Digital Library

வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையு நீக்கிக்
கருவி கரணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின்மய மான வித்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம் பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவனிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண்டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்களி நாட்டமும் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுனமுத் திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்

Koviloor Digital Library

கண்டது மாயைக் கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூஜை நைவேத்தியமும்
பத்தியாய்க் கொடுத்தேன் பரமனே போற்றி
ஏத்தி யனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்துக் குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்தமளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவினுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை அளித்த
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்வை யிடையூ றகற்றிப்
புல்லரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்பதகற்றிக்
காப்ப துனக்கு கடன்கண் டாயே!
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே!

Koviloor Digital Library

பத்தியும் நீயே பந்தமும் நீயே!
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே!
உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெண்
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியும் சீரும் பெருக
நல்வர மேதரும் புண்ணிய முதலே
வெண்ணீறணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிடுந் தேவே!
அரிதிருமருகா அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்!
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்!
மானத வாவி மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்!
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சிதா னந்த சற்குரு சரணம்
விக்கிந விநாயகா தேவே ஓம்
ஹர ஹர ஷண்முக பவனே ஓம்
சிவ சிவ மஹா தேவ சம்போ ஓம்!

நக்கீரர் அருளிய நல்லன எல்லாம் தரும் விநாயகர் திருவகவல் நிறைவுற்றது.

Koviloor Digital Library

உ

விநாயகர் 108 போற்றி வழிபாடு

திருச்சிற்றம்பலம்

ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி
மகரமாய் நின்ற வானவ போற்றி 5

பகர்முன் னவனாம் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
கார்குளி ராகக் கனிந்தாய் போற்றி 10

பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
திங்கட் சடையோன் செல்வ போற்றி 15

எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
உம்பர் போற்றும் உம்பல் போற்றி 20

பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி 25

Koviloor Digital Library

தெள்ளூறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க் கரிய தேவா போற்றி
மாலுக் கரிய மதகரி போற்றி
பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி

பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி
மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி

அரும்பொரு ளேயெம் ஐயா! போற்றி
திணைபால் கடந்த தேவே போற்றி
புணையாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி

அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி
உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி

கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்லாய் போற்றி
எம்பிரானாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி
பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி

தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர்கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர்கொண் டுள்ளாய் போற்றி

Koviloor Digital Library

வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
மூவாச் சாவா முத்தா போற்றி

ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் களிறே மணியே போற்றி
குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி

பெருச்சாளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத் தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி

கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்காரம் முளை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி

சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கு முந்தியோய் போற்றி
ஐந்துகை யுடைய ஐய போற்றி

ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
மயலறும் இன்ப வாழ்வே போற்றி

ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி

Koviloor Digital Library

பானை வயிற்றுப் பரமே போற்றி
கடம்பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி
பாலொடு தேனும் பருகுவோய் போற்றி 85

மேலொடு கீழாய் மிளிர்வோய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி
பொல்லா மணியே புராதன போற்றி 90

அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
குறிகுணம் கடந்த குன்றே போற்றி
எட்டு வான் குணத்து எந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தோய் போற்றி
மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி 95

அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்காரம் முகத்தொருத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி 100

அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
செல்வம் அருள்க தேவா போற்றி 105

நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்க எங்களையுன் கழலிணை போற்றி 108

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உழவாரம்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

புரவலர் கட்டணம் ரூ. 1000-/-

ஆயுள் சந்தா ரூ. 500/-

ஆண்டு சந்தா ரூ. 50/-

முகவரி :

பதிப்பாளர்
உழவாரம்
B.40, சுந்தரர் தெரு, திருநகர்,
மதுரை 6. Ph : 248 30 85

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. 37955

ஞானப்பேழை

இரண்டு பகுதிகள் - 500 பக்கங்கள் அரிய தகவல் களஞ்சியம் - 275 தலைப்புகளில் பலநூறு செய்திகள் தொகுக்கப் பெற்றுள்ளன. ரூ. 150 M.O. அனுப்பிடின் கூரியர் மூலம் அனுப்பப் பெறும்

M.O. அனுப்பவேண்டிய முகவரி :

அபிராமி அச்சகம்
B-40, சுந்தரர் தெரு, திருநகர்,
மதுரை - 625 006.

Koviloor Digital Library

சீடர் குழுவின் பணிகள்

1. தமிழகத்திலுள்ள சைவ ஆதீன மடாலயங்களின் ஆதி முதல்வர் குருபூசையன்று திருமடாலயங்களுக்குச் சென்று மகா சந்நிதானத்திற்கு பாத காணிக்கை செலுத்தி ஆசி பெற்று வருவது.

2. மகா சந்நிதானங்கள் மதுரைக்கு எழுந்தருளும் போது, அவர்களை தக்க மரியாதையுடன் வரவேற்று நகர் வலம் வருவது. மற்றும் சைவஅன்பர்கள் ஆசி பெற உதவுவது.

3. சைவ ஆதீனங்களுக்கும், சைவ சமுதாய அன்பர்களுக்கும் இடைவெளி இல்லாமல் பாலமாகச் செயல்படுவது.

4. சைவத் திருமுறைப் பாராயணம் ஓதுவது, ஓதுபவர்களை ஊக்குவிப்பது.

5. திருமுறை மற்றும் பக்திப் பாடல்களை இலவசமாக வெளியிடுவது ஆகியன.